

அருட்பெருஞ்ஜோதி
அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை
அருட்பெருஞ்ஜோதி

# வடலூருக்கு வந்தால் பெறலாம் நல்ல வரமே






வள்ளலார் அவதரித்த மருதூர் இல்லம்




தண்ணீரில் விளக்கெரித்த நற்கருங்குழி



சத்திய தருமச்சாலை



மேட்டுக்குப்பம் சித்திவளாகம்

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

# வடலூர் திருவருட்பிரகாச வள்ளலார் சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்சார் நிலையங்கள் பற்றிய வரலாறு

**கடலூர் மாவட்டம்.**

- **தமிழ்நாட்டின் தலைநகராம் சென்னையிலிருந்து தஞ்சாவூர் செல்லும் நெடுஞ்சாலையில் 200 கிலோமீட்டர் தொலைவில் வடலூர் உள்ளது.**
- **புதுச்சேரி, சிதம்பரம், விழுப்புரம், விருத்தாச்சலம், கடலூர் வழியாகவும் வடலூர் வரலாம். மற்றும் கடலூர், விருத்தாசலம் வழியாக இரயிலிலும் வரலாம்.**
- **சென்னை/திருச்சி/புதுச்சேரி வரை விமானத்திலும் வந்து பின் சாலை வழியாக வடலூர் வரலாம்.**
- **நான்கு சாலை சந்திப்பிலிருந்தும், வடலூர் ரெயில் நிலையத்திலிருந்தும் சுமார் இரண்டு கிலோ மீட்டர் தொலைவில் வள்ளலார் தெய்வநிலையத்தை அடையலாம் மற்றும் அங்கிருந்து இவ்வழிகாட்டியிலுள்ள வள்ளலார் தொடர்புள்ள இடங்களை அடைய வாடகை ஆட்டோ / கார் / மினிபஸ் வசதியும் உண்டு.**

## வடலூரில்

- *நடுத்தர தங்கும் விடுதிகள்*
- *சைவ உணவகங்கள்*
- *24 மணிநேர அரசு மற்றும் தனியார் மருத்துவ மனைகள்*
- *வங்கி / ஏ டி எம்*
- *பெட்ரோல் பங்க்*

* காவல்நிலையம்

போன்ற வசதிகளுடன் சுமார் 60 ஆயிரம் மக்கள் வசிக்கும் ஊர் இது.

நான்குசாலை சந்திப்பு வழியாக நான்கு திக்குகளிலும் 24 மணி நேர பஸ் வசதி உண்டு.

திருஅருட்பிரகாச வள்ளலார் தொடர்புள்ள அற்புதமான இடங்கள் பற்றிய சிறு கையேடு இது.

## 1. சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம் 1865

கடவுள் ஒருவரே. அவர் ஜாதியும் மதமும் சமயமும் கடந்து ஆதியும் அந்தமுமில்லா அருட்பெருஞ்ஜோதியாய் இருக்கிறார். அவர் அன்பையும் கருணையையும் மட்டுமே தனது வழிபாடாக ஏற்கிறார்.

எல்லா உயிர்களும் நமக்குச் சகோதரர்களே. உயிர்களுக் கெல்லாம் உதவிடுதல் வேண்டும். நம்மைச் சார்ந்தவருக் கெல்லாம் இன்புதரல் வேண்டும். சாதி, சமய, மத வேறுபாடெல்லாம் தவிர்த்தே சன்மார்க்கப் பொது அடைதல் வேண்டும்.

ஜீவகாருண்ய ஒழுக்கத்தினால் மட்டுமே கடவுள் அருளைப் பெறக்கூடுமே அல்லாது வேறு எந்த வழியாலும் சிறிதும் பெறஇயலாது என்று உறுதியாக அறிதல் வேண்டும். கொல்லாமை, புலால் உண்ணாமையை கடைப்பிடித்தல் வேண்டும். சிறுதெய்வ வழிபாட்டினையும், பலியிடுதலையும் தவிர்த்தல் வேண்டும்.

போகும் பாதைகளான சமயமத மார்க்கங்களில் பற்று வைக்காமல் போக வேண்டிய இடமான உண்மை

*ஆண்டவரிடத்தில் மட்டும் பற்று வைக்க வேண்டும் போன்ற அற்புதமான நெறிகளை உள்ளடக்கி 1865 ஆம் ஆண்டு வள்ளற் பெருமானால் தொடங்கப்பட்டதுதான் சன்மார்க்க சங்கம்.*

*உலக உயிர்கள் எல்லாம் பேரின்பசித்திப் பெரு வாழ்வைப் பெற்று வாழ வேண்டும் என்பதற்காக வள்ளற் பெருமான் அருளியவற்றில் முதலாவதும் முதன்மையானதும் இந்த சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கமே. வள்ளற் பெருமான் கருங்குழியில் தங்கியிருந்த காலத்தில் இந்த சங்கத்தை நிறுவினார்.*

**சமரசம்**

*சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கத்தில் சமரசம் என்றால் ஷடாந்தத்தின் சமரசமும் அவற்றிலிருந்து உருவான சமய மத மார்க்கங்களின் சமரசமும் ஷடாந்தம் என்றால் வேதாந்தம், சித்தாந்தம், போதாந்தம், நாதாந்தம், யோகாந்தம், கலாந்தம் ஆகிய ஆறு அந்தங்கள்தான் ஷடாந்தம்.*

*இந்த ஆறு அந்தக்களுக்குள் எல்லா சமய மத மார்க்கங்களும் அடங்கியிருக்கிறது. எனவே எல்லா சமய மத மார்க்கங்களில் உள்ள உண்மை அனுபவத்தையும் கொண்டு எல்லா சமய மத மார்க்கங்களுக்கும் சமரசமாக விளங்குகிறது சன்மார்க்க சங்கம். எனவே சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கத்தில் சமரசத்திற்கே முதலிடம்.*

**சுத்தம்**

*இரண்டாவதாக வரும் சுத்தம் என்பது சமய மத அனுபவங்களைக் கடந்தது. எல்லா சமய மத மார்க்கங்களில் உள்ள உண்மை அனுபவத்தையும் கடந்து அவற்றிற்கு*

*அப்பாலுக்கு அப்பால் உள்ள உண்மையையும் விளக்குவதால் அதனை சுத்தம் என்கின்றார் வள்ளற்பெருமான். எல்லா சமய மத மார்க்கங்களின் உண்மையையும் கொண்டது சமரசம். அவற்றை கடந்த உண்மையை தனித்து விளக்குவதால் சுத்தம் சமய மதத்தின் அனுபவமல்லாதது சுத்தம்.*

*எல்லா சமய மத மார்க்கங்களில் உள்ள உண்மையையும் கொண்டு, அதற்கு அப்பாலுக்கு அப்பால் உள்ள உண்மையையும் விளக்குவதால்தான் சுத்த சன்மார்க்கத்தை எல்லா சமய மத மார்க்கங்களுக்கும் பொதுநெறி என்பார் வள்ளற்பெருமான்*

**சன்மார்க்கம்:**

*இந்த சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கத்தில் மூன்றாவதாக வரும் சன்மார்க்கம் என்பதற்கு பொருள் உண்மையைத் தெரிவிக்கின்ற மார்க்கம். இதனை சத் மார்க்கம் என்று பிரிக்க வேண்டும். சத் என்பது உண்மைப் பொருள். மார்க்கம் என்பது வழி. சத்தென்னும் உண்மைப் பொருளாகிய இறைவனின் உண்மையைத் தெரிவிக்கின்ற மார்க்கம்.*

*எல்லா உயிர்களையுந் தன்னடிமையாகப் பாவித்தல் தாசமார்க்கம். எல்லா உயிர்களையும் தன் மகனாகப் பாவித்தல் சற்புத்திர மார்க்கம். எல்லா உயிர்களையும் தன் நண்பனாகப் பாவித்தல் சகமார்க்கம். எல்லா உயிர்களையும் தன்னைப் போல் பாவித்தல் சன்மார்க்கம். இதுபோலவே தான் கடவுளுக்கு அடிமையாதல் தாசமார்க்கம், மகனாதல் சற்புத்திர மார்க்கம், நண்பனாதல் சகமார்க்கம், கடவுளே தானாதல் சன்மார்க்கம். எனவே எல்லாச் சமயங்களுக்கும்*

*பொதுவாகிய அறிவு நூல் முடிபான நான்காவது மார்க்கத்தைக் கடைப்பிடிக்கின்ற கூட்டமென்று சன்மார்க்கத்தைக் குறிப்பிடுகின்றார் வள்ளற்பெருமான்.*

## சத்திய சங்கம்

*சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கத்தில் சத்தியம் என்பது நிலையானது. சங்கம் என்பது கூட்டம். எனவே சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம் என்பது எல்லா சமய மத மார்க்கங்களின் உண்மை அனுபவத்தையும் சமரசமாய் கொண்டு அவற்றிற்கு அப்பாலுக்கு அப்பால் உள்ள சுத்த அனுபவத்தையும் விளக்கும் உண்மை மார்க்கத்தைக் கடைப்பிடிக்கும் நிலையான கூட்டம் என்று பொருள்.*

## சன்மார்க்கப் படிகள்

*சமரச சுத்த சன்மார்க்கத்திற்குப் படிகள் மூன்று. அவை 1. ஷடாந்தங்களின் பொதுவாகிய ஷடாந்த சன்மார்க்கம். 2. சமரச சன்மார்க்கம். 3. சுத்த சன்மார்க்கம் என்பார் வள்ளற் பெருமான். ஷடாந்த சன்மார்க்கம் மற்றும் சமரச சன்மார்க்கத் திற்குள் எல்லா சமய மத மார்க்கங்களும் அடங்கி இருக்கிறது. சுத்த சன்மார்க்கத்திற்குள் ஷடாந்த சன்மார்க்கமும் சமரச சன்மார்க்கமும் அடங்கி இருக்கிறது.*

## சன்மார்க்க சங்கத்தவர்கள்

*சன்மார்க்க சங்கத்தாரை மூன்றாகப் பிரித்துக் கூறுகின்றார் வள்ளற்பெருமான். சுத்த சன்மார்க்கத்தைச் சார்ந்தவர்கள். சுத்த சன்மார்க்கத்திற்கு உரியவர்கள். சுத்த சன்மார்க்கத்தை அடைந்தவர்கள்.*

**சுத்த சன்மார்க்கம் சார்ந்தவர்கள்:** *கொல்லாமை, புலால் உண்ணாமையை கடைப்பிடித்து ஜீவகாருண்யம் செய்து கருணையோடு வாழ்பவர் எவராயினும் அவர் எந்த சமய மதத்தைச் சார்ந்தவராக இருந்தாலும் எந்த வழிபாட்டு முறையைக் கடைப்பிடிப்பவராக இருந்தாலும் அவர் எல்லாச் சமயங்களுக்கும், எல்லா மதங்களுக்கும், எல்லா மார்க்கங் களுக்கும், உண்மைப்பொது நெறியாகி விளங்கும் சன்மார்க்க சங்கம் சார்ந்தவரே.*

**சுத்த சன்மார்க்கத்திற்கு உரியவர்கள்:** *நல்லறிவு, கடவுள் பக்தி, உயிரிரக்கம், பொது நோக்கம், திரிகரண அடக்கம் முதலிய நற்குண ஒழுக்கங்களையும்; உண்மையுரைத்தல், இன்சொல்லாடல், உயிர்களுக்கு உபகரித்தல் முதலிய நற்செய்கை ஒழுக்கங்களையும் பெற்று கொலை, புலை தவிர்த்து ஞானஅறிவால் காம குரோதத்தைக் கடந்து, போகும் பாதைகளான சமய மத மார்க்கங்களில் உள்ள பற்றை நீக்கிப் போக வேண்டிய இடமான உண்மை ஆண்டவரிடத்தில் மட்டும் பற்று வைத்து வாழ்பவர் எவராயினும் அவர் சுத்த சன்மார்க்கத்திற்கு உரியவர் ஆவார்.*

**சுத்த சன்மார்க்கம் அடைந்தவர்கள்:** *அருளின் பூரணத்தைக் கொண்டு மரணத்தை வென்று பேரின்பப் பெருவாழ்வைப் பெற்று வாழ்பவர் சுத்த சன்மார்க்கத்தை அடைந்தவர் ஆவார். அவரே சுத்த சன்மார்க்கி. இந்த சுத்த சன்மார்க்கத்தை சார்ந்தவர்கள், சுத்த சன்மார்க்கத்திற்கு உரியவர்கள், சுத்த சன்மார்க்கத்தை அடைந்தவர்கள் மூவரும் சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கத்தார் ஆவர்.*

**சன்மார்க்க சாதனம்:**

*இந்த சமரச சுத்தசன்மார்க்கத் தலைவனாகிய எல்லாம் வல்ல இறைவனை வழிபாடு செய்வதற்குச் சாதனம் இருவகை: 1. பரோபகாரம், 2. சத்விசாரம், பரோபகாரம் என்பது தேகத்தாலும், வாக்காலும், மனத்தாலும், செல்வத்தாலும், உயிர்களுக்கு உதவி செய்வது. சத்விசாரம் என்பது கடவுளது புகழை விசாரித்தல், ஆன்மாவின் உண்மையை விசாரித்தல், தன்சிறுமையைக் கடவுளிடத்தில் விண்ணப்பித்தல்.*

**சுத்த சன்மார்க்கத்தின் முக்கிய லட்சியம்**

*எல்லா உயிர்களையும் சகோதரனாகவும் சமமாகவும் காணும் ஆன்மநேய ஒருமைப் பாட்டுரிமை.*

**சுத்த சன்மார்க்கத்திற்கு முக்கிய தடைகள்:**

*கொலை செய்தல், புலால் உண்ணுதல், சாதி, சமய, மதங்களில் பற்று வைத்தல்.*

**சுத்த சன்மார்க்க சங்கத்திற்கு தலைவன்**

*எல்லாம் வல்ல இறைவன்.*

**சுத்த சன்மார்க்க சங்கத்தின் முடிபு**

*மரணத்தைத் தவிர்த்து பேரின்ப சித்திப் பெரு வாழ்வைப் பெற்று வாழ்வது.*

**சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்சார் நிலையங்கள்**

*இந்த சுத்த சன்மார்க்க சங்கத்தை 1865 இல் நிறுவிய வள்ளற்பெருமான் இந்த சங்கத்தின் கீழ் வடலூரில் சமரச சுத்த சன்மார்க்க சத்திய தருமச்சாலையையும், சமரச சுத்த*

சன்மார்க்க சத்திய ஞானசபையும், மேட்டுக்குப்பம் சித்திவளாகத்தில் சத்திய ஞான தீப வழிபாட்டு முறையையும் சன்மார்க்கக் கொடியையும் அருளினார்.

வள்ளற்பெருமான் பேரின்பப் பெருவாழ்வு பெற்று இறைவனோடு இரண்டறக் கலந்த பின்னர் வள்ளற்பெருமான் வருவிக்கவுற்ற மருதூர் இல்லம், வள்ளற்பெருமான் 9 வருடங்கள் வாழ்ந்த கருங்குழி இல்லம் ஆகியவை இந்த சுத்த சன்மார்க்க சங்கத்தின் கீழ் வந்தன. வள்ளற்பெருமான் சென்னையில் 33 ஆண்டுகள் வாழ்ந்த இல்லத்தை இந்த சங்கத்தின் கீழ் கொண்டு வர முயற்சி நடந்துகொண்டு இருக்கின்றது. வள்ளற்பெருமான் வாழ்ந்த இந்த ஒவ்வொரு இல்லமும் நமக்குப் பல செய்திகளையும் பல அற்புதங் களையும் உணர்த்துகின்றது. அவற்றை ஒவ்வொன்றாகக் காண்போம்.

## 2. திருவருட்பிரகாச வள்ளலார் அவதரித்த மருதூர் இல்லம் 1823

05.10.1823 சுபானு ஆண்டு புரட்டாசித் திங்கள் இருபத்தோராம் நாள் ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணியளவில் இராமையா — சின்னம்மையாருக்கு, ஐந்தாவது குழந்தையாக அவதரித்தார் திருவருட்பிரகாச வள்ளலார். அவர் அவதரித்த இல்லம் இந்த மருதூர் இல்லம். இது தென் இந்தியாவில், தமிழ்நாட்டில், கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டத்தில் உள்ளது.

சென்னையிலிருந்து கும்பகோணம் செல்லும் சாலையில் வடலூருக்கு தெற்கே சிறிது தூரத்தில் இந்த மருதூர்

*சாலை பிரிகிறது. இந்த மருதூர் சாலை புவனகிரி வழியாக சிதம்பரம் செல்கின்றது. எனவே சிதம்பரத்திலிருந்து வருபவர்கள் புவனகிரி வழியாக மருதூர் வந்து திருவருட் பிரகாச வள்ளலார் அவதரித்த இல்லத்தைத் தரிசித்துவிட்டு வடலூர் வரலாம்.*

*இங்கு வாழ்ந்த காலத்தில்தான் வள்ளற்பெருமான் ஐந்து மாத குழந்தையாக இருந்தபொழுது தில்லை கோவிலில் சிதம்பரம் இரகசியம் கண்டு ஆனந்தமாய் சிரித்த அற்புதம் நிகழ்ந்தது. வள்ளலார் பிறந்த இந்த மருதூர் இல்லத்தில் வள்ளற்பெருமான் வருவிக்கவுற்ற தினம் ஆண்டுதோறும் அக்டோபர் 5ஆம்தேதியும் புரட்டாசி 21ஆம் தேதியும் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. இங்கு வழிபாட்டிற்காக அணையா தீபம் வைக்கப்பட்டுள்ளது.*

## 3. திருவருட்பிரகாச வள்ளலார் 1.5 வருடங்கள் வாழ்ந்த சின்னகாவண இல்லம் 1824–1825

*வள்ளற்பெருமான் ஆறு மாத குழந்தையாக இருந்த போது அவருடைய தந்தை இராமையா அவர்கள் கால மானார். குழந்தைகளை எப்படி வளர்த்து ஆளாக்கப் போகின்றோம் என்று நினைத்துக் கலங்கினார் தாயார் சின்னம்மையார். பொன்னேரிக்கு அருகில் சின்னகாவணத் தில் உள்ள தனது தாய்வீட்டிற்கு சென்று அங்கு குழந்தை களுடன் ஒன்றரை ஆண்டுகள் தங்கினார். இது வள்ளற் பெருமானின் தாய்வழிப் பாட்டி வீடு. வள்ளற்பெருமான் 2 வயது வரை இங்கு தங்கியிருந்தார்.*

## 4. திருவருட்பிரகாச வள்ளலார் 33 வருடங்கள் வாழ்ந்த ஏழுகிணறு இல்லம் 1825 – 1858

*பிறகு சென்னையில் உள்ள ஏழுகிணறு வீராசாமி தெரு 38ஆம் எண்ணுள்ள வீட்டில் குழந்தைகளுடன் சென்று தங்கினார் வள்ளற்பெருமானின் தாயார். இன்று இது வள்ளலார் நகராக உள்ளது. வள்ளலார் நகர் பேருந்து நிலையம் அருகிலும் ஸ்டான்லி மருத்துவமனைக்கு அருகிலும் இந்த இல்லம் உள்ளது. கோயம்பேடு பேருந்து நிலையத்திலிருந்து திருவொற்றியூர் செல்லும் பேருந்துகள் வள்ளலார் நகர் வழியாகச் செல்லும். தன்னுடைய 2 வயதிலிருந்து 35 வயது வரை 33 ஆண்டுகள் வள்ளற்பெருமான் இந்த இல்லத்திலேயே தங்கினார்.*

*இந்த இல்லத்தில்தான் வள்ளற்பெருமான் மூன்று நான்கு வயதில் தூக்கக் கலக்கத்தில் புரண்டு திண்ணையிலிருந்து கீழே விழநேர்ந்தபோது கீழே விழாமல் தாங்கித் தூக்கி அணைத்துத் திண்ணையில் படுக்கவைத்தான் இறைவன்.*

*இந்த இல்லத்தில் ஒரு சிறுஅறையில்தான் வள்ளற்பெருமானுக்குக் கண்ணாடியில் காட்சியளித்து படியாத படிப்பையெல்லாம் அரைக்கணத்தில் உணர்த்தினான் இறைவன். இந்த இல்லத்தில் ஒரு சிறுஅறையில்தான் விளையாடித் திரியும் பருவத்தில் இறைவனைப் பாடிப் பணிந்துகொண்டிருந்தார் வள்ளற்பெருமான்.*

*இந்த இல்லத்தில்தான் வள்ளற்பெருமான் பசியோடு திண்ணையில் படுத்திருந்தபோது இறைவன் அண்ணியார் வடிவில் வந்து வள்ளற்பெருமானுக்கு உணவளித்து பசி*

தீர்த்தது. வள்ளற்பெருமானை முருகக் கடவுளாகக் கண்டு அண்ணனும் அண்ணியும் வள்ளற்பெருமானின் காலில் விழுந்தனர். தான் எந்த நிலையிலும் தங்களின் தம்பியே என்று கூறி வள்ளற்பெருமான் அண்ணன் அண்ணியின் காலில் விழுந்தது இந்த இல்லத்தில்தான்.

வள்ளற்பெருமான் சிறுவயதில் கந்தகோட்டம் முருகன் கோவிலுக்குச் சென்று வழிபட்டு பல பாடல்கள் இயற்றியது; சிறுவயது வள்ளற்பெருமான் அதுவரை யாரும் கூறாத வகையில் சொற்பொழிவாற்றி அனைவரையும் வியக்க வைத்தது; இறைவன் கோயிற் பூசகர் வடிவில் வந்து உணவளித்தது; காலைச்சுற்றிய பாம்பைப் போ என்று சொன்னவுடன் சென்றது; திருநீறளித்து வாத நோய் தீர்த்தது; சங்கராச்சாரியாருக்கு வடமொழி நூல் ஒன்றில் ஏற்பட்ட சந்தேகம் தெளிவித்தது; சங்கராச்சாரியார், சமஸ்கிருதம் தாய்மொழி என்றபோது அப்படி என்றால் தமிழ் தந்தை மொழி என்று கூறி தமிழ் என்னும் சொல்லுக்கு உரையிட்டது; எல்லோரையும் திட்டிய நிர்வாண சந்நியாசி ஒருவர் இளம்வயது வள்ளற்பெருமானை பார்த்து உத்தம மனிதன் என்று கூறிய அற்புதம் நிகழ்ந்தது; வள்ளற்பெருமான் திருவொற்றியூர் சிவனை வழிபட்டு பல பாடல்கள் இயற்றியது; தொழுவூர் வேலாயுதனார் வள்ளற்பெருமானின் மாணவரானது; திருவொற்றியூர் செல்லும் வழியில் மழை வந்ததால் இல்லாத ஒரு குறுக்கு வழியில் அனைவரையும் விரைவில் அழைத்து சென்றது; மணலெல்லாம் சிவலிங்கமானது போன்ற பல அற்புதங்கள் வள்ளற்பெருமான் இந்த இல்லத்தில் வாழ்ந்த காலத்தில் நிகழ்ந்தன.

*இந்த இல்லத்தில்தான் வள்ளற்பெருமான் ஒழிவிலொடுக்கம், தொண்டமண்டல சதகம், சின்மயதீபிகை ஆகியவற்றைப் பதிப்பித்தார். மனுமுறைகண்டவாசகத்தை இயற்றினார்.*

## 5. திருவருட்பிரகாச வள்ளலார் 9 வருடங்கள் வாழ்ந்த கருங்குழி இல்லம் 1858 – 1867

*தன்னுடைய 35ஆவது வயதில் சென்னை வாழ்வை விட்டு வடலூருக்கு அருகில் உள்ள இந்தக் கருங்குழி இல்லத்தில் வசிக்கத் தொடங்கினார் வள்ளற்பெருமான். வள்ளற்பெருமான் பற்றி அதிகம் கேள்விப்பட்டு அவர் மீது மிகுந்த பக்திபூண்டவர்கள் வேங்கடரும் அவரது துணைவியார் முத்தியாலு அம்மாளும் ஆவர். அவர்களின் அன்பு வேண்டுகோளுக்கு இணங்க அவர்கள் இல்லத்திலேயே ஒன்பது ஆண்டுகள் தங்கினார் வள்ளற்பெருமான்.*

*1858 முதல் 1867 இல் சத்திய தருமச்சாலையை வடலூரில் ஏற்படுத்தி அங்கெழுந்தருளும் வரை இந்தக் கருங்குழி இல்லமே வள்ளற்பெருமானது உறைவிடமானது. வள்ளற்பெருமான் 44 வயது வரை இந்தக் கருங்குழி இல்லத்தில் தங்கியிருந்தார். வள்ளற்பெருமான் சன்மார்க்க சங்கம் அமைத்ததும் திருவருட்பாவைத் தொகுத்து அனுப்பியதும் சத்திய தருமச்சாலையை ஏற்படுத்தத் தொடங்கியதும் இந்த இல்லத்திலிருந்துதான்.*

*தண்ணீரில் விளக்கெரிந்த அற்புதமும் இந்த இல்லத்தில் தான் நிகழ்ந்தது. இறைவன் மானிடத் திருமேனி தாங்கி வந்து அருள் செய்ததும் இந்த இல்லத்தில்தான் நிகழ்ந்தது.*

வள்ளற்பெருமானின் தேக பொலிவையும் பிரகாசத்தையும் கண்ட கருங்குழி ஊர் மக்கள் வள்ளற்பெருமானை மாப்பிள்ளை சாமி என்று அழைக்கும் வழக்கம் உடையவர் களாக இருந்தனர். வள்ளற்பெருமான் கருங்குழி கிராமத்தை நற்கருங்குழி என்று சிறப்பித்துக் கூறுகின்றார். வள்ளற் பெருமான் மீசையுடன் இருக்கும் வரைபடம் இந்தக் கருங்குழி இல்லத்தில் மட்டுமே உண்டு.

தவயோகி கல்பட்டு ஐயாவை ஆட்கொண்டது; சிதம்பரம் நடராஜர் கோவில் சென்று வழிபட்டு பல பாடல்கள் இயற்றியது; இறைவனின் திருநடனம் கண்டது; சிதம்பரத்தில் உருகி அழுத வள்ளற்பெருமானின் முன் இறைவன் தோன்றி வள்ளற்பெருமானை தேற்றியது; வள்ளற்பெருமானுக்கு இறைவன் அருட்பேரொளி அளித்தது; வள்ளற்பெருமான் திருநீறளித்து புற்றுநோயை நீக்கியது; சித்தர் ஒருவர் வந்து வள்ளற்பெருமானைக் கண்டு கண் இமைக்கும் நேரத்தில் காசிக்குச் சென்றது; வள்ளற்பெருமானைத் தீண்டிய பாம்பு இறந்தது; இரும்பைப் பொன்னாக்கி காட்டியது; இருளில் வழிதெரியாமல் தடுமாறியவருக்கு வழித்துணை அருளியது; வள்ளற்பெருமான் திருநீறு கேட்க இறைவன் செஞ்சுடர்பூ தந்தது போன்ற பல அற்புதங்கள் வள்ளற் பெருமான் கருங்குழியில் தங்கி இருந்த காலத்தில்தான் நிகழ்ந்தன.

இந்த இல்லத்தில் வள்ளற்பெருமான் தங்கியிருந்த அறை ஆறரை அடி அகலமே உடையது. முன்பு வாசல் இருந்த இடத்தில் தற்பொழுது ஜன்னல் உள்ளது. ஜன்னல் இருந்த இடத்தில் வாசல் வைத்து வழிபாட்டிற்கு அணையா தீபமும்

*வள்ளற்பெருமானின் மீசைவைத்த வரைபடமும் வைக்கப் பட்டுள்ளது. வள்ளற்பெருமான் தனது முப்பத்து ஐந்தாம் வயதில் இவ்வாறு இருந்ததாக அறியப்படுகின்றது.*

*சென்னையிலிருந்து கும்பகோணம் செல்லும் சாலை யிலும் வடலூரிலிருந்து விருத்தாச்சலம் செல்லும் சாலை யிலும் சுருங்குழிக்கு செல்லும் சாலை பிரிகிறது.*

## 6. சமரச சுத்த சன்மார்க்க சத்திய தருமச்சாலை 1867–1870

*வள்ளற்பெருமாள் கருங்குழி இல்லத்தில் தங்கியிருந்த காலத்தில் வடலூரில் சமரச சுத்த சன்மார்க்க சத்திய தருமச்சாலையை ஏற்படுத்தினார்.*

*மனிதப்பிறப்பைப் பெற்றுக்கொண்டதன் லட்சியம் மரணமில்லாப் பெருவாழ்வு, மரணமில்லாப் பெருவாழ்விற்கு அவசியம் இறையருள். இறையருளைப் பெறுவதற்கு இன்றியமையாதது ஜீவகாருண்யம். ஜீவகாருண்யம் என்பது ஆன்மஉருக்கம் கொண்டு ஆண்டவனைத் தொழுவது. ஆன்ம உருக்கம் என்பது பிறஉயிர்களின் துக்கத்தை எண்ணி உருக்கம் கொள்வது. அந்த உருக்கத்தைக்கொண்டு அதன் துக்கத்தைப் போக்கினால் அதுவே ஜீவகாருண்யம். அந்த ஜீவகாருண்யமே கடவுள் வழிபாடு.*

**ஜீவகாருண்யம் என்பது ஜீவகருணையை வளர்த்து கடவுளின் கருணையைப் பெறுவது. கொல்லாமை, புலால் உண்ணாமையைக் கடைப்பிடித்து பசித்த உயிர்களுக்கு ஆகாரத்தால் பசிநீக்கி உயிர்க்கொலையை எவ்வித தந்திரத்தினாலாவது தடைசெய்து** *எல்லா உயிரையும் தன்னுயிரைப் போலப் பார்க்கும்*

உணர்வை வருவித்துக் கொள்வது. இந்தக்குணம் வந்தவன் எவனோ அவன்தான் இறந்தவரை எழுப்புகிறவன்; அவனே ஆண்டவனுமாவான் என்கின்றார் வள்ளற்பெருமான்.

ஜீவகாருண்யத்தின் முக்கிய லட்சியம் எந்த வகையாலும் ஆதாரமில்லாத ஏழைகளுக்கு உண்டாகின்ற பசியென்கின்ற பெரிய ஆபத்தை நிவர்த்தி செய்வதே. எனவே அந்த ஜீவகாருண்ய ஒழுக்கத்தை நடத்தும் பொருட்டு கடலூர் மாவட்டம் வடலூர் பார்வதிபுரத்தில் சத்திய தருமச்சாலை ஒன்று ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது என்கின்றார் வள்ளற் பெருமான்.

**ஜீவதேகங்களே ஆலயங்கள். ஜீவகாருண்யமே கடவுள் வழிபாடு என்ற இந்த சுத்த சன்மார்க்கத்தின் தலையாய கொள்கையைக் கொண்டு 23–05–1867** பிரபவ ஆண்டு வைகாசி மாதம் 11 ஆம் தேதி வடலூரில் சமரச சுத்த சன்மார்க்க சத்தியத் தருமச்சாலையைத் தொடங்கி, அதில் அணையா அடுப்பை ஏற்றி பசியால் வாடுபவர்களின் பசியை நீக்கினார் வள்ளற்பெருமான்.

எவ்வகையிலும் ஆதாரம் இல்லாதவர்கள் தருமச்சாலையில் எல்லா வேளையும் ஆகாரம் பெற்று மகிழ்ந்தார்கள். தருமச்சாலை உணவு, பசிதீர்க்கும் விருந்தாகவும், நோய் தீர்க்கும் மருந்தாகவும் அமைந்தது. எப்பொழுது வந்தாலும், எத்தனை பேர் வந்தாலும் தருமச்சாலையில் உணவு இல்லை என்ற சொல்லே இல்லை. வள்ளற்பெருமான் தருமச்சாலையிலேயே தங்கி ஜீவகாருண்யத்தை உலகில் விருத்தியடையச் செய்தார். 1867 முதல் 1870 இல் மேட்டுக்குப்பம் செல்லும்

*வரை நான்காண்டு காலம் இந்தத் தருமச்சாலையிலேயே தங்கினார் வள்ளற்பெருமான்.*

*வள்ளற்பெருமான், "சத்திய தருமச்சாலையில் எந்நேரமும் அடுப்பு எரிந்து கொண்டேயிருக்க வேண்டும்; அதன் மூலம் பசித்து வருபவர்களின் வயிற்று நெருப்பைத் தணித்துக்கொண்டே இருக்க வேண்டும்." என்று தமது அன்பர்களுக்குக் கட்டளையிட்டார். 1867 இல் அவர் ஏற்றிய அடுப்பு 150 வருடத்திற்கும் மேலாக அணையாமல் அனைவரின் பசியையும் மாற்றி வருகின்றது.*

*மிகக் குறைவான உணவைக் கொண்டு பல பேருக்கு உணவிட்டும் உணவு குறையாமல் அப்படியே இருந்த அற்புதம் இந்த சத்திய தருமச்சாலையில்தான் நிகழ்ந்தது; அரிசி பற்றாக்குறை வந்தபோது தருமச்சாலையில் வள்ளற்பெருமான் தனித்து அமர்ந்து இறைவனிடம் விண்ணப்பித்து அரிசி வரவழைத்தது; தருமச்சாலை வெளியில் அமர்ந்து வள்ளற் பெருமான் நிட்டையிலிருக்கும் பொழுது சூரியனுக்கும் வள்ளற்பெருமானுக்கும் இடையே ஒளிப்பிழம்பு தோன்றியது; எல்லாம் வல்ல இறைவன் வள்ளற்பெருமானுக்கு அடைய வேண்டிய பயனை எல்லாம் தருமச்சாலையில் ஒரு பகலில் தந்தது; தருமச் சாலையில் வள்ளற்பெருமானை எழுப்பி இறைவன் அருளமுதம் அருளியது; வள்ளற்பெருமானுக்கு இறைவன் பேரின்பத்தைத் தழைக்கச்செய்தது; சிதம்பரத்தில் நடைபெற்ற ஆருத்ரா தரிசனத்தைத் தருமச்சாலையில் இருந்தவாரே தருமச்சாலையின் ஒரு பகுதியில் திரை மறைப்பில் காணச் செய்தது; சன்மார்க்க போதினி பாடசாலை அமைத்தது. திருக்குறள் வகுப்பு நடத்தச் செய்தது;*

*பல மொழிகளில் தன்னுடைய திறமையை காட்ட வந்தவர் பேச முடியாமல் நின்றது; ஜீவகாருண்ய ஒழுக்கத்தைத் தருமச்சாலை துவக்கநாள் விழாவிலேயே வெளிப்படுத்தி அருளியது; பெருநெறி ஒழுக்கங்களைப் பெற்றுக்கொள்ள வலியுறுத்தியது; கழுத்தில் ஒரு ஆள் சுமை இருப்பதுபோல் தாங்க முடியாமல் தவித்தவருக்கு திருநீறு தந்து குணமளித்தது; திருநீறு கொடுத்து குன்ம நோயை குணப்படுத்தியது; தருமச்சாலையில் ஐந்து வேளை திருநீறு கொடுத்து வெண்குஷ்டம் நீக்கியது; சூன்யத்தால் உடல் மெலிந்த ஒருவர் வள்ளற்பெருமானிடம் முறையிட ஸ்ரீராம நாம பதிகம் பாடிக்கொடுத்து பாராயணஞ் செய்ய கூறி குணமடையச் செய்தது; தருமச்சாலையை சுற்றிவரச் செய்து நோய் தீர்த்தது; பதினோருபேரின் சுரத்தைத் தான் வாங்கி நீக்கியது; இரவில் விளக்கில்லாமலேயே திருவருட்பா எழுதியது; கணக்கிலவதானி முத்துசாமி அவர்களின் வெண்பாவிற்கு வள்ளற்பெருமான் எழுதிய உரையைக் கண்டு முத்துசாமி அவர்கள் வடலூர் வந்து வீதியில் வீழ்ந்து வணங்கிக் கொண்டே வந்து வள்ளற் பெருமானைக் கண்டு வித்துவான் என மதித்திருந்தேன் பரிபூரண ஞானி என்று உணரவில்லை மன்னிக்க வேண்டும் என வேண்டியது போன்ற பல அற்புதங்கள் இந்த சத்திய தருமச்சாலையில்தான் நிகழ்ந்தன.*

*வள்ளற்பெருமான் ஒரே சமயத்தில் பல இடங்களில் திகழ்ந்தது; ஒரு செம்பு தண்ணீரைக் காலில் ஊற்றச் செய்து மழை பொழியச் செய்தது; அதேபோல் தலையில் தண்ணீர் ஊற்றச் செய்து பண்ருட்டி புதுப்பேட்டை கிணறுகளில் நீர் ஊறச் செய்தது; காயத்திரி மந்திரத்தின் மெய்ப்பொருளை*

விளக்கியது; ஒரு வீட்டில் பற்றியத் தீயை இருந்த இடத்தி லிருந்தே தன் மேலாடையை வீசி அணைத்தது; கள்வர்களை அசையமுடியாமல் நிற்கச் செய்தது; கள்வர்களுக்கும் கருணை செய்தது; அமாவாசை என்பவருக்கு தினந்தோறும் செலவுக்கு அரைரூபாய் கிடைக்கச் செய்து புலால் உண்ணும் பழக்கத்தை மாற்றியது; இருவரைப் புலால் உண்ணும் பழக்கத்தை விடச்செய்து அவர்களின் நிலத்தில் ஐந்து மடங்காக விளைச்சல் பெருகச் செய்தது; வேட்டவலம் ஜமீன்தாரின் இரண்டு மனைவிகளின் நோயைத் திருநீறு கொடுத்து நீக்கி உயிர்ப்பலி தடுத்தது; வயிற்றுவலியால் வருந்திய ஒருவருக்கு துளசியும் நீரும் கொடுத்து குணமாக்கியது; கடலூர் மஞ்சக்குப்பம் நீதிமன்றத்திற்கு வள்ளற் பெருமான் சென்றவுடன் நீதிபதி முதற்கொண்டு அனைவரும் எழுந்து நின்றது; சத்திரம் அமைக்கச் செய்து குழந்தை வரம் கிடைக்கச் செய்தது; வள்ளலாரின் உபதேசம் கேட்க வந்தவர்களுக்கு இரவில் காட்டுப்பகுதியில் துணையாக தீவர்த்தி முன்சென்றது; மணலைப் பொன் துகள்களாக்கியது; வள்ளற் பெருமானின் கரத்தில் வைத்த வெள்ளித்துண்டு நீராய் உருகி ஓடியது போன்ற பல அற்புதங்கள் வள்ளற்பெருமான் தருமச்சாலையில் வாழ்ந்த காலத்தில் நிகழ்ந்தன.

அணையா தீபத்தை ஏற்றி அருவுருவ வழிபாட்டு முறையையும், ஞானசிங்காதன பீடம் எனும் அருவ வழிபாட்டுமுறையையும் சத்திய தருமச்சாலையில் அமைத்தார் வள்ளற்பெருமான். பிற்காலத்தில் அன்பர்களால் வள்ளற்பெருமானின் திருவுருவ படமும் வள்ளற்பெருமானின்

*திருக்கரத்தால் எழுதிய அருட்பெருஞ்ஜோதி அகவலும் சத்திய தருமச்சாலையில் வழிபாட்டிற்கு வைக்கப்பட்டது.*

*மாதந்தோறும் பூசம், தைப்பூசம், வைகாசி 11 இல் சத்திய தருமச்சாலை விழா, அக்டோபர் 5 வள்ளற்பெருமானின் வருவிக்கவுற்ற தினம் ஆகியவை சத்திய தருமச்சாலையில் சிறப்பாக கொண்டாடப்படுகின்றன.*

## சமரச சுத்த சன்மார்க்க சத்திய ஞானசபை 1872

*மக்களின் வயிற்றுப் பசிக்கு தருமச்சாலையை அமைத்ததுபோல் அறிவுப்பசிக்கு சங்கம்சார் திருக்கோயி லான சத்திய ஞானசபையை அமைத்தார் வள்ளற்பெருமான். சாதி, மதம், இனம், மொழி, தேசம், உயர்ந்தோர் தாழ்ந்தோர் போன்ற எல்லாப் பிரிவினையும் கடந்து ஒற்றுமையின் சின்னமாய் உருவாகியது சத்திய ஞானசபை. பல அற்புத விளக்கங்களையும், அறிந்திடாத பல அருமையான இரகசியங் களையும் தனக்குள் கொண்டு அமைதியாக நிற்கின்றது சத்திய ஞானசபை. வள்ளற்பெருமான் பல பாடல்களில் இந்த சத்திய ஞானசபையின் சிறப்பை விளக்குகின்றார்.*

*பெருங்கருணையுடன், உண்மை அனுபவஞான சிறப்பும் சேர்ந்து பேரறிவுக்கு அமைக்கப்பட்ட ஒரு சன்மார்க்க திருக்கோயிலே இந்த சத்திய ஞானசபை. சத்திய ஞானசபையானது ஆகாயத்திலிருந்துத் தரையை நோக்கி மலர்ந்த, எட்டு இதழ்த் தாமரை மலரின் தோற்றம்; செங்காவி நிறத்தில் எண்கோண அமைப்பில் கம்பீரமான வடிவம்; உலகின் எந்த ஒரு மூலையிலும் இந்த அமைப்பினைக் காண இயலாது. உலகம் கண்டிடாத அந்த அற்புதச் சபையை*

வடலூர் கண்டது. அதுவரை யாரும் அவ்வளவு எளிதாக இறைவனை விளக்கியதில்லை. தனக்குள் தெய்வம் கண்டு தெவிட்டாத இன்பம் கொண்ட வள்ளல் பெருமானார், அந்தப் பேரின்பத்தை உலகம் அறிந்து, இன்புற வேண்டு மெனும் தீராத ஆசை கொண்டார். ''நான் பெற்ற நெடும்பேற்றை ஓதி முடியாது என்போல் இவ்வுலகம் பெறுதல் வேண்டுவனே'' என்று இறைவனிடம் முறையிட்டு, அந்த ஆதிஅந்தமில்லா அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரை இவ்வுலகம்காண எடுத்துரைக்க, வள்ளல் பெருமான் எழுப்பிய சபைதான் சத்திய ஞானசபை.

ஒவ்வொரு ஆன்மாவினுள்ளும், இறைவன் புரியும் இரகசிய நடனத்தை மேடை ஏற்றி ஞானசபையாக்கினார் வள்ளற்பெருமான். பழங்காலத்திலிருந்தே ஆன்மாவிற்கு சபை அமைத்தார்கள். அதனைச் சுற்றி உடம்புக்கு ஆலயம் அமைத்தார்கள். அந்த ஆன்மாவிற்கு உள்ளொளியாய் இருந்து இறைவன் அசைந்து ஆன்மாவை அசைவிப்பதை நடனம் என்றார்கள். அந்த இறை நடனத்தால் ஆன்மாக்களானது அஞ்ஞானம் நீங்கிக் கடவுள் நிலை எய்துவதையே சத்திய ஞானசபையாக அமைத்தார் வள்ளற்பெருமான்.

வடலூர் பார்வதிபுரத்தில் ஓர் ஞானசபையை காணுதல் வேண்டும் என்று அறிவித்து எந்தத் தடையும் இன்றி அந்த ஞானசபை தோன்றி விளங்கவும் செய்வித்து வீற்றிருந்து அருளுகின்றார் எல்லாம் வல்ல இறைவன் என்கின்றார் வள்ளற்பெருமான்.

இனி இச்சீவர்கள் விரைந்து விரைந்து, இறந்து இறந்து, வீண் போகாமல், உண்மையறிவு, உண்மையன்பு, உண்மை

*இரக்கம் முதலிய சுபகுணங்களைப்பெற்று, நற்செய்கையுடைய ராய், எல்லாச் சமயங்களுக்கும், எல்லா மதங்களுக்கும், எல்லா மார்க்கங்களுக்கும், உண்மைப்பொது நெறியாகி விளங்கும் சுத்த சன்மார்க்கத்தைப் பெற்று, பேரின்ப சித்திப் பெரு வாழ்வில் பெருஞ்சுகத்தையும் பெருங்களிப்பையும் அடைந்து வாழும் பொருட்டு மேற்குறித்த உண்மைக் கடவுள், ஓர் ஞானசபையை இங்கே தமது திருவருட் சம்மதத்தால் இயற்றுவித்து, வீற்றிருக்கின்றார் என்று ஞானசபையில் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் எழுந்தருளி இருப்பதையும் குறிப்பிடுகின்றார் வள்ளற்பெருமான்.*

## முதல் தைப்பூச ஜோதி தரிசனம் 25–01–1872

*25—01—1872 தை மாதம் 13ஆம் தேதி வியாழக்கிழமை பூசநட்சத்திரத்தில் சத்திய ஞானசபை வள்ளற்பெருமானால் கட்டி முடிக்கப்பட்டு முதல் தைப்பூச விழா எழுதிரை நீக்கி அருட்பெருஞ்ஜோதி தரிசனம் காண்பிக்கப்பட்டது.*

*தைப்பூசத்தில் மட்டுமே ஏழுதிரைகளை நீக்கி அருட்பெருஞ்ஜோதி தரிசனத்தைக் காண்பிக்கும் இந்த முறையை வகுத்துத் தரிசனத்தைக் காண்பிக்கச்செய்தவர் வள்ளற்பெருமான். ஆன்மாவாகிய நமக்குள் உள்ளொளியாக இருந்து இறைவன் நடம் புரியும் நடனத்தை அருட்பெருஞ் ஜோதி தரிசன வழிபாட்டு முறையாக அமைத்தார் வள்ளற்பெருமான். உருவ வழிபாடு அருவுருவ வழிபாடு அருவ வழிபாடு ஆகியவற்றைக் கடந்த சொரூப வழிபாட்டு முறை இது. நமது உடலில் இருக்கும் ஆன்மாவாகிய நம்மையும் நம் பிரகாசத்தையும் பல திரைகள் மறைக்கின்றது. அதில்*

*முதன்மையானது 7 திரைகள் இந்த திரைகள் நீங்கி ஆன்மாவானது கடவுள்அறிவாகப் பிரகாசிப்பதே சத்திய ஞானசபை. அந்த ஆன்மாவின் உள்ளொளியாகிய பதியே அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர்.*

## 7 திரைகள்:

*மாதந்தோறும் நடைபெறும் பூசத் திருநாளில் கடைசி திரையை மட்டும் விலக்காமல் ஜோதி தரிசனத்தை காண்பிப்பார்கள். அந்தக் கடைசித் திரைதான் கலப்புத்திரை யாகிய அனுபவத் திரை. அது ஏன் பாதித்திரையாக இருக்கின்றது என்றால் அனுபவத் திரையால் அருட்சத்தியை முழுவதுமாக மறைக்கமுடியாது.*

*அந்தக் கலப்புத்திரையானது பச்சை செம்மை பொன்மை வெண்மை ஆகிய நான்கு வண்ணம் கலந்த வெள்ளை. ஒரு வெள்ளை ஒளியில் 7 நிறங்கள் இருப்பதுபோல் இந்த வெள்ளைத்திரையாகிய கலப்புத்திரையில் நான்கு நிறங்கள் உண்டு. அது வெளிப்படையாகத் தெரியாது.*

*தைப்பூசத்தில் இந்தக் கலப்புத்திரையாகிய பாதி திரையும் நீக்கப்பட்டு பூரண ஜோதி தரிசனத்தைக் காணலாம். தைப்பூசமானது ஞானத்தின் பூரண நாள் என்பதை உணர்த்தவே இவ்வாறு செய்யப்படுகின்றது. அந்த 7 திரைகளும் நீக்கப்பட்ட ஆன்மாவானது கடவுளறிவைப் பெற்று பிரகாசித்துப் பேரறிவோடு பேரறிவாக கலந்து நிறைந்துவிடும். அந்த 7 திரைகள் எதுவென்றால்*

*கருப்புத்திரை — அசுத்த மாயாசத்தி, தேகமயக்கம் மற்றும் மனமயக்கம்; நீலத்திரை சுத்த, அசுத்த மாயாசத்தி,*

*உலக மயக்கம்; பச்சைத் திரை கிரியாசத்தி, செயல்மயக்கம்; சிவப்புத்திரை பரசத்தி, பயன்மயக்கம்; பொன்மைத்திரை இச்சாசத்தி, விருப்ப மயக்கம்; வெண்மைத்திரை ஞானசத்தி, அறிவு மயக்கம்; கலப்புத்திரை ஆதிசத்தி, அனுபவ மயக்கம். இந்த மயக்கங்கள் எல்லாம் ஆன்மாவையும் ஆன்மப் பிரகாசத்தையும் மறைக்கின்றது. முதல் மூன்று திரை ஆன்மாவை மறைக்கின்றது. அடுத்த நான்கு திரை ஆன்ம பிரகாசத்தை மறைக்கின்றது. இந்த மயக்கங்கள் எல்லாம் நீங்கி ஒரு ஆன்மாவானது கடவுளறிவைப் பெற்று பிரகாசிப்பதே சத்திய ஞானசபை. அதன் உள்ளொளியே அருட்பெருஞ் ஜோதி தரிசனம்.*

## ஞானசபை எண்கோண அமைப்பு :

*அப்படிக் கடவுளறிவாய் பிரகாசிக்கும் ஆன்மாவிற்கு எட்டுக் குணங்கள் உண்டு. அந்த எட்டுக் குணங்களே எண்கோண வடிவமாக அமைக்கபட்டது அந்த எட்டுக் குணங்கள் எதுவென்றால் தன்வயத்தனாதல், தூய உடம்பினனாதல், இயற்கை உணர்வினனாதல், முற்றும் உணர்தல், இயல்பாகவே பாசங்களிலிருந்து நீங்குதல், பேரருள் உடைமை, முடிவில்லா ஆற்றல் உடைமை, வரம்பில்லா இன்பமுடைமை ஆகியவையாகும்.*

## சிற்சபை – பொற்சபை – ஞானசபை :

*சத்திய ஞானசபைக்குள் பொற்சபை சிற்சபை ஞானசபை என்ற மூன்று உண்டு. இதில் பொற்சபை என்பது ஆன்மாகாசம் ஆன்மவெளி ஜீவ அறிவு. சிற்சபை என்பது ஆன்மா ஆன்மஅறிவு. ஞானசபை என்பது ஆன்மப் பிரகாசம்*

கடவுளறிவு. ஜீவஅறிவின் மூலம் ஆன்மஅறிவு விளக்கம் பெற்று சிற்சபையாகிறது. அந்த ஆன்ம அறிவு உடல் முழுக்கப் பரவி ஆறு ஆதாரங்களையும் பிரகாசிக்கச் செய்து அந்த உடல் அறிவுருவாகி பொற்சபையாகிய ஆன்மாகாசமாகிறது. அந்த உடலையும் தாண்டி ஆன்ம அறிவானது அண்ட அண்டங் களையும் கடந்து செல்லும் பொழுது அந்த ஆன்மப் பிரகாசம் கடவுளறிவாகிய ஞானசபையாகிறது. இதனை சுத்த சன்மார்க்கத்திற்குப் படிகள் 3. அவை சிற்சபை, பொற்சபை, சுத்த ஞானசபை என்பார் வள்ளற்பெருமான்.

சத்திய ஞானசபை என்பது இறைவனின் பேரறிவாகிய இயற்கை விளக்கம். அதுவே ஆன்மப் பிரகாசம். இயற்கை விளக்கம் என்பது எல்லாம் வல்ல இறைவனின் பேரறிவு. அந்தப் பேரறிவைப் பெற்ற ஆன்மாவே ஆன்மப்பிரகாசம் உடையது. அந்த ஆன்மப் பிரகாசமே ஞானசபை.

ஜோதி தரிசனம் என்பது எல்லாம் வல்ல இறைவனின் திருவுருவமாகிய இயற்கை உண்மை. அதுவே ஆன்மப் பிரகாசத்தின் உள்ளொளியாய் இருக்கிறது. அந்த ஆன்மப் பிரகாசத்தின் உள்ளொளியே கடவுள்.

அருட்பெருஞ்ஜோதி திருநடனம் என்பது இறைவனின் கருணையாகிய இயற்கை இன்பம். ஆன்மாக்களின் உள்ளொளியாகிய எல்லாம் வல்ல இறைவனின் அசைவு. அவர் நமக்குள் உள்ளொளியாய் இருந்து அசைவதனால் மட்டுமே நாம் அசைந்துக் கொண்டிருக்கின்றோம். அந்த உள்ளொளியின் அசைவே நடனம்.

அகமாகிய ஆன்மப் பிரகாசமே ஞானசபை, அந்தப் பிரகாசத்துக்கு உள்ளிருக்கும் பிரகாசம் கடவுள். அந்த

உள்ளொளியின் அசைவு நடம். இதுதான் ஞானாகாச நடனம் என்றும், அலைவுற்றதே நடராஜர் என்றும், ஆனந்த நடனம் என்றும் சொல்லுகின்றது என்பார் வள்ளற்பெருமான்.

ஆன்மப் பிரகாசமாகிய ஞானசபையே இயற்கை விளக்கம். அதன் உள்ளொளியாகிய அருட்பெருஞ்ஜோதி நடராஜபதியே இயற்கை உண்மை. அந்த உள்ளொளியின் அசைவாகிய நடமே இயற்கை இன்பம்.

இந்த இயற்கை விளக்கம் என்கின்ற தனிப்பெரும் பதமாகிய இறைவனின் பேரறிவாகிய ஞானசபை, இயற்கை உண்மை என்கின்ற தனிப்பெரும் பொருளாகிய இறைவனின் திருவுருவம், இயற்கை இன்பம் என்கின்ற தனிப்பெருஞ் சுகமாகிய இறைவனின் அசைவாகிய திருநடம் இந்த மூன்றும் சேர்ந்ததே அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் என்பார் வள்ளற் பெருமான். இந்த மூன்றும் சேர்ந்ததே அருட்பெருஞ்ஜோதி சொரூபம். இந்த மூன்றும் சேர்ந்ததே இயற்கை விளக்க நிறைவு.

## அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் :

அருட்பெருஞ்ஜோதி என்றால் பெரிய தயவுடைய அறிவே பூரண இன்பமாம் என்கின்றார் வள்ளற்பெருமான். அருள் என்பது கடவுளின் தயவு. அந்த தயவே அவருடைய பேரறிவு, அந்த பேரறிவே நிறைவான இன்பம். அந்த அறிவு எப்படிப்பட்டது என்றால் ஒப்பற்ற பெருந்தயவுடைய பேரறிவு என்பார் வள்ளற்பெருமான். எனவே, அருட்பெருஞ்ஜோதி என்றால் ஒப்பற்ற பெருந்தயவுடைய போறிவாகிய நிறைவான இன்பம் என்று பொருள்.

*கடவுள் ஒருவரே அவர் ஜாதியும் மதமும் சமயமும் கடந்து ஆதியும் அந்தமுமில்லா அருட்பெருஞ்ஜோதியாய் இருக்கிறார் என்று கூறி எல்லாம்வல்ல இறைவனின் சொரூபத்தை இவ்வாறு விளக்குகின்றார் வள்ளற்பெருமான்.*

**சத்திய ஞானசபை கதவுகள் :**

*சத்திய ஞானசபையைச் சுற்றிலும் ஒன்பது கதவுகள். முன்பக்கம் மூன்று கதவுகள். ஆக பன்னிரண்டு கதவுகள் இருக்கும். இதில் பன்னிரண்டாவது கதவின் வழியே மட்டுமே ஜோதி தரிசனத்தைக் காண முடியும்.*

*சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகியவற்றில் பதினாறு நிலைகள் உண்டு. அவை சரியையில் சரியை, சரியையில் கிரியை, சரியையில் யோகம், சரியையில் ஞானம், கிரியையில் சரியை, கிரியையில் கிரியை, கிரியையில் யோகம், கிரியையில் ஞானம், யோகத்தில் சரியை, யோகத்தில் கிரியை, யோகத்தில் யோகம், யோகத்தில் ஞானம், ஞானத்தில் சரியை, ஞானத்தில் கிரியை, ஞானத்தில் யோகம், ஞானத்தில் ஞானம்.*

*இந்த 16 நிலைகளில் 12ஆவது நிலையாகிய யோகத்தில் ஞானமே 12ஆவது கதவு. சத்திய ஞானசபை வழிபாட்டின் தொடக்கமே யோகத்தில் ஞானம். எனவே தான் சாதாரண சரியை கிரியை யோக வழிபாட்டு முறைகள் சத்திய ஞானசபையில் கிடையாது.*

*சத்திய ஞானசபை 12 கதவுகளில் யோகத்தில் ஞானமாகிய ஜோதி தரிசனக் கதவை தவிர மற்ற சரியை கிரியை யோக கதவுகளை திறந்தாலும் அருட்பெருஞ்ஜோதி தரிசனத்தைக் காண இயலாது. யோகத்தில் ஞானம் எனும் 12*

ஆவது கதவைத் திறந்தால் அதன் பிறகு இருக்கும் ஏழு திரைகளில் முதல் இரண்டு திரைகளாகிய அசுத்த மாயா சத்தி சுத்த அசுத்த மாயாசத்தி இரண்டும் ஞானத்தில் சரியை, மூன்றாவது திரையாகிய கிரியாசத்தி ஞானத்தில் கிரியை, நான்கு ஐந்தாவது திரைகளாகிய பரசத்தி இச்சா சக்தி இரண்டும் ஞானத்தில் யோகம், ஆறு மற்றும் ஏழாவது திரைகளாகிய ஞானசத்தி ஆதிசத்தி இரண்டும் ஞானத்தில் ஞானம்.

கோவில் வழிபாடானது சரியையில் சரியையில் தொடங்கி யோகத்தில் யோகத்தோடு முடிகிறது. சபை வழிபாடானது யோகத்தில் ஞானத்தில் தொடங்கி ஞானத்தில் ஞானத்தைக் கடந்து ஒளிர்கின்றது. ஆக 16 நிலைகளையும் கடந்தது சத்திய ஞானசபை வழிபாடு. எனவேதான் வள்ளற்பெருமான் ‘‘நந்நாலும் கடந்தே ஒளிர் ஞான சபாபதியே’’ என்று பாடுகின்றார். நந்நான்கு 16 நிலைகளைக் கடந்து ஒளிர்கின்றது அருட்பெருஞ்ஜோதி தரிசனம்.

சன்மார்க்க சாதனங்கள் இரண்டு. ஒன்று சத்விசாரம் மற்றொன்று பரோபகாரம். இதில் சத்விசாரமானது யோகத்தில் ஞானத்தில் தொடங்கி ஞானத்தில் யோகம் வரை சென்று நிராசையை உண்டாக்குகின்றது. சரியை முதலிய சாதகம் நான்கில், நான்காவது ஞானத்தில் சரியை, ஞானத்தில் கிரியை, ஞானத்தில் யோகம், ஞானத்தில் ஞானம் என்கின்ற நான்கில் மூன்றாவது படியாகிய ஞானத்தில் யோகம் செய்கின்ற பலனாகிய நிராசை என்னும் படி உண்டாகின்றது. ஆகையினாலே, இந்த விசாரத்திலிருந்து கொண்டிருங்கள் என்பார் வள்ளற்பெருமான். இச்சா சத்தியாகிய ஆசை

*மயக்கமே பொன்மைத் திரை. இந்தத் திரை வரை சத்விசாரத்தால் நீங்குகின்றது. இது ஞானத்தில் யோகம் செய்கின்ற பலன், 15 ஆவது நிலை. இதன் பிறகும் இரண்டு திரைகள் உண்டு.*

*ஆனால் ஜீவகாருண்யமாகிய பரோபகாரமானது இந்த 16 நிலைகளையும் கடந்து செல்கின்றது. சீவகாருணியம் என்கின்ற மோட்ச வீட்டுத் திறவுகோலைக் காலமுள்ளபோதே சம்பாதித்துக் கொண்ட சமுசாரிகள் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்கிற சாதன சகாயங்களை வேண்டாமல், எக்காலத்தும் அடையாத இன்ப வீட்டை அடைந்து அவ்வீட்டுக் கதவைத் திறந்து கொண்டு, உள்ளே புகுந்து, நித்திய முத்தர்களாய் வாழ்வார்கள் என்று குறிப்பிடுகின்றார் வள்ளற்பெருமான்.*

## சத்திய ஞானசபை சாளரங்கள்:

*சத்திய ஞானசபையை கற்றியுள்ள 14 சாளரங்கள் ஆன்மாவின் அனுபவ சித்திகளாகும். ஜீவசாக்கிரம், ஜீவ சொப்பனம், ஜீவ சுழுத்தி நிர்மல சாக்கிரம், நிர்மல சொப்பனம், நிர்மல சுழுத்தி பரசாக்கிரம், பர சொப்பனம், பர சுழுத்தி, குருசாக்கிரம், குருசொப்பனம், குருசுழுத்தி, குருதுரியம், குருதுரியாதீதம் ஆக மொத்தம் 14. இவைகளைக் கடந்த சுத்த சிவசாக்கிரம் சுத்த சிவ சொப்பனம் சுத்த சிவ சுழுத்தி சுத்தசிவ துரியம் சுத்த சிவ துரியாதீதம் ஆகியவை ஞானசபையாகிய ஆன்மப் பிரகாசத்தின் அனுபவமாக உள்ளது. இந்த 5 அனுபவங்கள் சுத்த சன்மார்க்கத்தில் மட்டுமே சாத்தியம் என்கின்றார் வள்ளற்பெருமான்.*

*உடலையே ஆலயமாக கொண்டு 96 தத்துவங்களை விளக்கும் கோயில்களுக்கு தத்துவ விளக்கம் உண்டு. அந்த ஆலயத்தில் குடியிருக்கும் ஆன்மாவையும் அந்த ஆன்மா வினுள் குடியிருக்கும் ஆண்டவனையும் விளக்க அமைக்க பட்ட ஞானசபையின் விளக்கத்தை தத்துவ விளக்கம் என்று கூறக்கூடாது. ஏனென்றால் ஆன்மாவும் ஆண்டவனும் உண்மைப்பொருள், உயிர்ப் பொருள், அறிவுப் பொருள். தத்துவங்கள் ஜடப்பொருள். தத்துவங்கள் உருவாக்கப்பட்டது. உண்மைப் பொருள் என்றும் இருப்பது. எனவே, இதனை உண்மை விளக்கம் என்றே கூறவேண்டும். சத்திய ஞானசபை, அகவல் மண்டபம், சத்திய ஞானசபையைச் சுற்றிப் பிணையப்பட்ட இரும்பு சங்கிலி ஆகியவற்றிற்கு தத்துவ விளக்கம் கூறலாம். அவைகள் தத்துவங்களுக்கு உட்பட்டவை. சிற்சபை பொற்சபை ஞானசபை தத்துவங்களுக்கு அப்பாற் பட்டவை.*

*சத்திய ஞானசபை பற்றி இந்த விளக்கங்கள் எல்லாம் நமது சிற்றறிவுக்கு எட்டும் வரையில் கூறப்பட்டதே. சத்திய ஞானசபை பற்றிய விளக்கங்கள் நம் சிற்றறிவால் புரிந்துகொள்ள முடியாத தூரத்திலும் இருக்கின்றது.*

## ஞானசபை முன் மண்டபம் (அகவல் மண்டபம்)

*நமது உடலில் 10 துவாரம் உண்டு அதில் 8 துவாரங்கள் நமது கண்டத்திற்கு மேல் உள்ளது. அவை செவி இரண்டு கண் இரண்டு நாசி 2 வாய் ஒன்று. அண்ணாக்கில் உள்ள மூலாதாரம் ஒன்று. இந்த மூலாதாரம் ஆறு ஆதாரங்களில் ஒன்று இல்லை. உடலுக்கு மூலாதாரம் ஆறு ஆதாரங்களில்*

*ஒன்றாய் முதுகுதண்டின் அடிப்பகுதியில் இருக்கிறது. உயிருக்கு மூலாதாரம் அண்ணாக்கில் உள்ளது. இது ஆன்ம அனுபவத்தால் மட்டுமே விளங்கும். சத்திய ஞானசபை முன்மண்டபத்தில் 5 வாயில்கள் 2 சாளரங்கள் உள்ளது. இவை ஏழும் கண்டத்திற்கு மேல் உள்ள ஏழு துவாரங்கள். 8 ஆவது துவாரமாகிய அண்ணாக்கில் உள்ள மூலாதாரம் திறக்கப்படுவதே ஜோதி தரிசனக் கதவு திறக்கப்படுவது. ஐந்து படிகளைக் சுடந்து இந்த ஞான சபை கதவு திறக்கப்படுகின்றது என்பது ஐந்து ஆதாரங்களைக் கடந்து ஆறாவது ஆதாரமாகிய புருவமத்தியில் உள்ளது என்று பொருள்.*

## இரும்புச் சங்கிலி :

*சத்திய ஞானசபையைச் சுற்றிலும் இரும்புச் சங்கிலி போடப்பட்டுள்ளது. இது உயிரையும் உடம்பையும் இணைக்கும் மூச்சு சங்கிலி. இதில் 21600 சங்கிலி பிணைப்பு உள்ளது என்று கூறப்படுகின்றது. இது நாம் ஒரு நாளைக்கு விடும் மூச்சின் அளவாக உள்ளது. இது 150 வருடங்களுக்கும் மேலாக மழையிலும் வெயிலிலும் மண்ணிலும் கிடந்தும் துருப்பிடிக்காமல் இருக்கிறது. இந்த இரும்பு சங்கிலியை தோளில் அணிந்துகொண்டால் நம் உடலை பிடித்த நோய், துஷ்ட சத்திகள், தோஷங்கள் போய்விடும் என்று பலர் இதனை சிறிது நேரம் தோளில் அணிந்து செல்லும் வழக்கம் இருக்கிறது.*

## சத்திய ஞானசபை வாயில் விதி

*நம்முள் இருக்கும் இறைவனை நாம் உணர வள்ளற்பெருமானால் அமைக்கப்பட்டதே இந்த சமரச சுத்த*

*சன்மார்க்க சத்திய ஞானசபையில் சாதி, மத, இனம், மொழி, நாடு போன்ற எந்தவித பாகுபாடுமின்றி அனைத்து மக்களும் வழிபடலாம்.*

*சத்திஞானசபையில் நுழைந்து வழிபாடு செய்ய அனைவருக்கும் அனுமதி உண்டு. ஆனால், அவர்கள் புலை, கொலை தவிர்த்திருக்க வேண்டும் என்பதே வள்ளற்பெருமான் வகுத்த விதி. எனவே, சத்திய ஞானசபை நுழைவு வாயிலில் புலை, கொலை தவிர்த்தோர் மட்டுமே உள்ளே புகுதல் வேண்டும் என்று எழுதப்பட்டிருக்கும். இந்த விதி வள்ளற் பெருமானால் வகுக்கப்பட்டது.*

*பிறப்பின் அடிப்படையில் சத்திய ஞானசபைக்குள் நுழைய எந்தத் தடையும் இல்லை, ஒழுக்கத்தின் அடிப்படையில் தடை உண்டு. கொல்லாமை, புலால் உண்ணாமை ஆகியவற்றை கடைப்பிடிப்பவர்களே சத்திய ஞானசபைக்குள் நுழைய வேண்டும்.*

## சத்திய ஞானசபை வழிபாட்டு விதி (18–07–1872)

*ஞானசபையில் உள்ள அருட்பெருஞ்ஜோதி தீபத்தைப் பராமரிப்பவர்களுக்கு மேலும் சில விதிகளை வகுத்துள்ளார் வள்ளற்பெருமான். அவர்கள் 12 வயதிற்கு உட்பட்ட சிறுவராக இருக்க வேண்டும் அல்லது 72 வயதிற்கு மேற்பட்ட பெரியவராக இருக்க வேண்டும். அந்த சிறுவரும் பெரியவரும் பொருள் இடம் போகம் முதலியவற்றில் சிறிதும் இச்சை இல்லாதவர்களாய் தெய்வ நினைப்புள்ளவர்களாய் அன்புடையவர்களாயிருத்தல் வேண்டும். ஞானசபைக்குள் தூசு துடைக்க உள்ளே செல்லும் பொழுது நீராடிச் சுத்த*

*தேகத்தோடு கால்களில் துணி சுற்றிக்கொண்டு உள்ளே புகுந்து முட்டிக்காலிட்டுக் கொண்டு தூசு துடைக்க வேண்டும். மற்ற அன்பர்கள் பரிசுத்தராய்ப் புறத்தில் நின்றுகொண்டு மெல்லெனத் துதித்தல் வேண்டும் என்று 18—07—1872இல் சத்திய ஞான சபை வழிபாட்டு விதியை வகுத்து அருளினார் வள்ளற் பெருமான்.*

## சத்திய ஞானசபை ஜோதி தரிசனம் :

*சத்திய ஞானசபையில் தினந்தோறும் தீப வழிபாடும் மாதந்தோறும் பூச நட்சத்திரத்தில் இரவு 7.45 மணிக்கு அருட்பெருஞ்ஜோதி தரிசன வழிபாடும், தைப்பூசத்தில் 7 திரைகள் நீக்கி ஆறு காலத்திலும் அருட்பெருஞ்ஜோதி தரிசன வழிபாடும் செய்யப்படுகின்றது. தைப்பூசத்தன்று காலை 6 மணி, காலை 10 மணி, மதியம் 1 மணி, இரவு 7 மணி, இரவு 10 மணி, மறுநாள் காலை 5.30 மணி ஆகிய ஆறு காலங்களில் அருட்பெருஞ்ஜோதி தரிசனம் காண்பிக்கப்படுகின்றது.*

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க!


**1–12–2023**



சத்திய ஞானசபை



தைப்பூச ஜோதி தரிசனம்


CMBT BUS STAND K...
Vadalur Bus Stand
4 hr 2
4 hr 1
4 hr 57
2 day
5 hr 4 min
Thoraipakkam
4 hr 1 min
Tindivanam
திண்டிவனம்
4 hr 22 min
பாண்டிச்சேரி
Viluppuram
விழுப்புரம்
Cuddalore
கடலூர்
வடலூர்
4 hr 1 min (200 km)
Fastest route now due to traffic conditions